1994 மே 5]

பார்த்து அடுத்த கூட்டத்தில் விவாதிப்பதற்கும் அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலேதான் அது கூட்டப்படும். அது ஒரு ஆலோசனைக் குழுவாகத்தான் இருக்குமே ஒழிய, அது எதையும் இம்ப்ளிமென்ட் செய்யமுடியாது. ஆலோசனை வழங்கக்கூடிய குழுவாக அது அமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் ஆஸ்பத்திரி ஜில்லாவினுடைய தலைமை ஆஸ்பத்திரி. அங்கே குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழு அமைத்திருந்தாலும்கூட அங்கே தண்ணீர் வசதி இல்லை. நோயாளிகள் வரும்போது அவர்களை உள்ளிருப்பு நோயாளிகளாக வைப்பதற்கு இடமே இல்லை, பக்கத்திலே அரசுக்குச் சொந்தமான இடம் காலியாக இருக்கிறது. அந்த இடத்தை நாம் எடுத்து, அங்கே 'பி' கிளாஸ் 'சி' கிளாஸ் என்ற அளவுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கான ஏற்பாடுகளை அமைச்சரவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே தண்ணீர் பிரச்சினை இருக்கிறதென்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அங்கே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் இது பற்றிச் சொல்லியிருக்கிறோம். அதற்கான நடவடிக்கை தற்காலிகமாகக்கூட எடுக்கப்பட்டதாக எனக்குத் தெரிவித்தார்கள். குறிப்பாக புதிதாகக் கட்டிடம் கட்டுவதைப் பொறுத்தவரையில் நமக்கு இருக்கிற பிரச்சினை நிதிப் பிரச்சினைதான். ஒவ்வொரு இடத்திலும் இருக்கும் கட்டிடங்களைப் பராமரிப்பது என்பதிலேயே மிகக் கடினமான சூழ்நிலை இருக்கிறது. எனவே புதிய கட்டிடங்களைப் பொறுத்தவரையில் தேவையின் அடிப்படையிலே பிரையாரிட்டிவைஸ் எடுத்துக்கொண்டு நாம் செய்து கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே இது எந்த அடிப்படையிலே இருக்கிறதோ, அதைப் பார்த்து எதிர்காலத்திலே அது பற்றி யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 523, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

523—

திருச்சி காஜாமலை காலனியில் அரசு மருந்தகத்தை மீண்டும் ஏற்படுத்தல்.

*13296—டாக்டர் ஜி. ஆர். மாலா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 மே 5

(அ) திருச்சி வீட்டு வசதிப் பிரிவு, காஜாமலை காலனியில் மீண்டும் அரசு மருந்தகம் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள காஜாமலை காலனி வீட்டு வசதிப் பிரிவில் அரசு மருந்தகம் பல காலம் செயல் படுத்தப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டது. மீண்டும் முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் முன்னாள் அமைச்சர் திரு. நல்லுசாமி அவர்களின் உடனடி நடவடிக்கையால் மீண்டும் அந்த மருந்தகம் அங்கே செயல்பட்டது. மீண்டும் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அது நிறுத்தப்பட்டது. ஆகவே நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மீண்டும் அந்த மருந்தகம் செயல்பட்டால். எமர்ஜன்சிக்காகவாவது காய்ச்சல், மற்ற சிறு சிறு உடற்கோளாறுகளுக்கு மருத்துவ உதவி அளிக்கும் வகையில் செயல்பட்டால், அங்கே குடியிருக்கும் காலனி வாழ் மக்களுக்குக்பேருதவியாக இருக்கும் என்ற கருத்தை அறிவுறுத்தி, மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அரசு மருந்தகத்தை செயல்படுத்துவதற்கு, மிகப் பெரிய அளவில் இல்லாவிட்டாலும் குறைந்த அளவில் நிதி ஒதுக்கீடு செய்து அதை மீண்டும் செயல்படுத்த முன்வருவார்களா என அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற இடத்திலிருந்து தலைமை மருத்துவமனை 4 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது, அது அல்லாமல் ஒரு நல்வாழ்வு மையமும் அங்கே ஒரு சேவை நிறுவனத்தின் மூலமாக நடைபெற்று வரு கிறது. அதிலே 8 படுக்கைகள் இருக்கின்றன. அங்கே மருத்து வர்கள் இருக்கிறார்கள். சில வசதிகளையும் அவர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். எனவே கூடுதலாக அங்கே தேவைப்படாது என்று சொல்லி துறையின் மூலமாக எனக்கு இங்கே குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கின்ற கருத்தினை அடிப்படையாக வைத்து துறை அதிகாரிகளை மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்யும்படி நான் அவர்களுக்கு அறிவுறுத்துகிறேன்.

1994 மே 5]

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சேவை நிறுவனத்தில் மகப்பேறு சம்பந்தப் பட்டவைகளைத்தான் பார்க்கிறார்கள். சிறு, சிறு நோய்களுக்கு எல்லாம் அவ்வளவு வசதிகள் இல்லாததால், மீண்டும் அதை அறிவுறுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டி லேயே அந்த அரசு மருந்தகத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொண்டு அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அங்கே ஒரு டிஸ்பென்சரி ஆரம்பித் தாலும் கூட அடிப்படையாக ஓ. பி. என்ற வகையிலே தான் நடத்த முடியும். ஆகவே அந்த வகையிலேதான் அங்கே வைக்க வாய்ப்பு இருக்கிறது. பெரிய வசதிகளை ஏற்படுத்துவதும் முடி யாது. அங்கே 4 கிலோ மீட்டர் தூரத்திலேயே தலைமை மருத்துவமனை இருக்கின்ற காரணத்தால் அவ்வளவு வசதிகள் அங்கே தேவைப்படாது என்று கருதுகிறேன். இருந்தாலும் கூட இப்போது ஆரம்பித்து விட முடியுமா என்று சொல்லிவிட முடி யாது. மீண்டும் துறையைக் கேட்டு ஆய்வு செய்யச் சொல்லி அதற்குப் பின்னாலேதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 524, டாக்டர் க. கோபால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

524—

இயற்கை எரிவாயுவைக் கொண்டு சோழன் போக்கு வரத்துக் கழகப் பேருந்துகளை இயக்குதல்.

* 21590— டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் போக்குவரத்துக் கழக அனைத்துப் பேருந்து களையும் இயற்கை எரிவாயுவைக் கொண்டு இயக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS